# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 214/2020

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ஆனி வினோ ராஜாத்தி **Rw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of February 2026.

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதார் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 2ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் எ.ம.சா.ஆ. 2 ஆகும். 2) TN-76-F-7894 என்ற வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் வழங்கிய காப்பீடு சான்றின்

சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.3 ஆகும். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்திற்குள்ளான வாகனம், முழு காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாலிசி, பேக்கேஜ் பாலிசி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக பதிவுசெய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில், விபத்தை தவிர்ப்பதற்காக ஆட்டோவை அதன் ஓட்டுநர் ஓரமாக நிறுத்திவிட்டார் என்றும், அதன் பின்னர்தான் ஆட்டோ கவிழ்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு வழக்கு முடித்துவைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாகன உரிமையாளருக்குத்தான் எங்கள் காப்பீடு கழகத்திலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருடைய மனைவிக்கோ, குடும்பத்தினருக்கோ நோட்டீஸ் அனுப்பி இறந்துபோன நபரின் ஓட்டுநர் உரிமத்தை கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா, இல்லையா என்பதை உறுதியாக சொல்லக்கூடிய அதிகாரம் எங்கள் நிறுவனத்திற்கு கிடையாது என்றால் சரிதான். மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதை மறைத்து, நான் தவறாக நிறுவனத்திற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi